# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடம்

## பெண் இல்லப் பொறுப்பாளர் / ஆண் இல்லப் பொறுப்பாளர்
## (Gents Warden / Ladies Warden)

மேற்கூறிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகள் : கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

கல்விப் பொதுத் தராதர (உயர்) தரப் பரீட்சையில் ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சைத் தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்

தொழில்சார் தகைமைகள் : ஏற்புடையதல்ல

அனுபவம் : அரசாங்கம் அல்லது அரசாங்கம் சார்ந்த அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விடுதிப் பொறுப்பாளராக குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

வயது : 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**மற்றும்**

சம்பளம் : (ரூபா 60,950 - 10X730 - ரூபா 68,250.00 (MN 1 - IIIஆம் தரம்)

சேவை நிபந்தனை : நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமை உண்டு.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும்/ வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை நிர்வாகச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2026-06-01ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

2026-05-12.